## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## கும்முடிப்பூண்டி

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண்: C.C. 197 /2022 | | காவல் நிலையம்: DCB திருவள்ளூர் | |
| பெயர் : தனலட்சுமி | அ.சா.4 | | நாள் : 15.10.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.4 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனலட்சுமி | தாலுக்கா | : | சென்னை |
| கணவர் பெயர் | : | அன்பழகன் | தொழில் | : | -- |
| கிராமம் | : | எம் ஜி ஆர் நகர் | வயது | : | 44 |

(எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் அவர்களின் சார்பாக வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சென்னை எம்ஜிஆர் நகரில் கடநத் 24 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் எம்.ஏ பி.இட் தமிழ் படித்துள்ளேன். நான் வழக்கு சம்பவ காலத்தில் வளசரபாக்கத்திலுள்ள கிரேஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 16 வருடங்களாக தமிழாசிரியராக பணிபுரிந்து வந்தேன். நான் பணிபுரிந்த காலத்தில் எனக்கு மாத ஊதியமாக ரூ.15 ஆயிரம் கொடுத்தார்கள். 2014 ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கேசவன் என்பவர் மூலமாக சின்ன கருப்பன் என்பவர் தொலைபேசி மூலமாக பழக்கம். அவர் எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமிழ் துறையில் தமிழாசிரியராக அரசு பணி வாங்கி தருவதாக சொன்னார். அந்த வருடம் நான் டிஆர்பி தேர்வு எழுதியதாக சொன்னேன். மினிஸ்டர் கோட்டா உள்ளதாகவும் அது அவருக்கு தெரியும் என்று எனக்கு ஆசை வார்த்தை கூறினார். அதற்காக ரூ.5 இலட்சம் செலவாகும் என்று கூறினார். 2014 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் (தேதி ஞாபகமில்லை) கும்மிடிப்பூண்டியிலுள்ள சண்முகம் என்பவர் வீட்டில் கேசவன், சின்னகருப்பன் மற்றும் அரவணைசெல்வம் இருந்தார்கள். நான் அப்போது சின்னகருப்பனிடம் ரூ.5 இலட்சம் ரொக்கமாக கொடுத்தேன். மேற்படி தொகையில் ரூ.3 இலட்சத்தை எனது நாத்தனார் விஜயலட்சுமியிடம் கடன் பெற்றும், ரூ.2 இலட்சம் எனது சேமிப்பில் இருந்தும் கொடுத்தேன். எனக்கு ஒரு வாரத்தில் வேலை வாங்கி தருவதாக சொன்னார். ஆனால் சொன்னபடி வேலை வாங்கி தரவில்லை. எனவே 25.02.2019 ம் தேதி

சண்முகம், கேசவன் மற்றும் நான் மூவரும் சேர்ந்து ருக்மாங்கதன் என்ற காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுத்தோம். புகாரை வாங்கி விசாரிப்பதாக சொன்னார். ஆனால் என்னை காவல் ஆய்வாளர் விசாரிக்கவில்லை. எனக்கு வேலை வாங்கி தருவதாக சொல்லி ஆசை வார்த்தை கூறி சின்னகருப்பன் நம்பிக்கை துரோகம் செய்துவிட்டார். அந்த சின்னகருப்பனை என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்ட இயலும். **( எதிரி நீதிமன்றத்தில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் எதிரியை அடையாளம் காட்ட இயலவில்லை. எனினும் கற்றறிந்த எதிர் தரப்பு வழக்கறிஞர் அடையாளம் குறித்து எந்த ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எம்.ஏ. பி.இட் தமிழ் படித்துள்ளேன். நான் படித்தது முதுகலை பட்டம் என்றால் சரிதான். நான் 2006 ஆம் ஆண்டு பி.இட் படித்து முடித்தேன். 2008 ம் ஆண்டு கிரேஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் தமிழாசிரியராக பணியில் சேர்ந்தேன். 2023 ம் ஆண்டு நான் மேற்படி பணியில் இருந்து நின்று விட்டேன். அரசு பணியில் ஆசிரியராக சேர வேண்டும் என்றால் டிஆர்பி தேர்வு எழுதி தேர்ச்சி பெற வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு தேர்ச்சி பெற்றால் நேர்முக தேர்வு வைத்து தான் பணி நியமனம் செய்வார்கள் என்றால் சரிதான். 2014 ம் ஆண்டு நான் டிஆர்பி தேர்வு எழுதியதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 2014 ம் ஆண்டுக்கு முன்பு அல்லது அதற்கு பின்பு நான் டிஆர்பி தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இது வரை டிஆர்பி தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்றால் சரிதான். நான் 16 ஆண்டுகள் தமிழாசிரியராக பணியில் இருந்தேன். லஞ்சம் கொடுப்பது என்பது குற்றம் என்று ஆசிரியர் என்ற வகையில் எனக்கு தெரியும் என்றால் சரிதான், ஆனால் அவர் ஆசை வார்த்தை கூறினார் அதனால் அவரிடம் கொடுத்தேன். 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ரூ.5 இலட்சம் கொடுத்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்தேன். 25.02.2019 தேதியிட்ட புகாரில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் வருமான வரி தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் நிரந்தர கணக்கு எண் உள்ளது. என்னிடம் சேமிப்பு பணம் ரூ.2 இலட்சம் இருந்ததற்கான ஆவணத்தை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சின்னகருப்பன் அரசு வேலை வாங்கி தருவதாக என்னிடம் எந்த ஒரு காலத்திலும் சொல்லவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சின்னகருப்பன் என்னிடம் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல, நான் பணம் கொடுத்தேன். சண்முகம் வீட்டில் சின்னகருப்பனும் அரவணை செல்வமும் இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் ஆசிரியர் பணிக்காக பணம் கொடுத்த சம்பவத்திற்கும் சின்னகருப்பனுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அசா.1 சண்முகம் எனது தம்பி என்றால் இல்லை. எனது அண்ணனின் மாமனார் என்றால் சரிதான். அசா.2 கேசவன் எனது தாய்மாமா உறவு என்றால் சரிதான். பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக புதுக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் அங்கு செல்லவில்லை அதனால் அது பற்றி எனக்கு தெரியாது. புதுக்கோட்டையில் அளித்த புகார் 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடமோ சண்முகம் மற்றும் கேசவனிடமோ வேலை வாங்கி தருவதாக சின்னகருப்பன் கூறவில்லை என்றால் சரியல்ல சின்னகருப்பன் வேலை வாங்கி தருவதாக சொல்லி என்னிடம் ரூ.5 இலட்சம், சண்முகத்திடம் ரூ.4 இலட்சம், கேசவனிடம் ரூ.2 இலட்சம் முதல் தவணையாக வாங்கினார். சின்ன கருப்பன் எங்களிடம் பணம் வாங்காத காரணத்தினால் தான் அது தொடர்பாக எந்த ஆவணத்தையும் எங்களால் தாக்கல் செய்யவில்லை முடியவில்லை என்றால் சரியல்ல. வேலை வாங்கி தருவது மற்றும் பணம் வாங்கியது தொடர்பான சம்பவத்திற்கும் 2ம் எதிரி அரவணை செல்வத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் ரூ.3 இலட்சம் வாங்கியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது நாத்தனாரிடமிருந்து வாங்கியதால் அதற்கு ஆவணம் இல்லை. 2014 ஆம் ஆண்டு டிஆர்பி தேர்வில் தேர்ச்சி பெறாத காரணத்தினால் எனக்கு ஆசிரியர் பணிக்கு தகுதி இல்லை என்றால் சரிதான். தகுதியில்லாத பணியை வாங்கி தருமாறு ஒருவரை தூண்டுவது குற்றம் என்றால் நான் தூண்டவில்லை, நான் எனக்கு வேலை வேண்டாம் என்று தான் சொன்னேன், எதிரி தான் ஆசை வார்த்தை கூறினார். நான் வேறு யாரிடமோ பணம் கொடுத்து ஏமாந்துவிட்டு எதிரிகள் மீது பொய்யான குற்றச்சாட்டு

தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் சம்பவத்திற்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

ஒம்/– தனலட்சுமி

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R

Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2025.10.15 15:20:32 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி